# கிரீன்வுட் தொடக்கப்பள்ளி

- மின்னேடு பதிப்பு 2

1

## நன்றியுணர்வுடன்...




(6 Resilience) தொடக்கநிலை ஆறில் பயிலும் லியோங் யோங் போ தனது வகுப்புத் தோழி, வொங் சின் யூ மன உளைச்சலினால், தனது பள்ளிப்பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல் தவிப்பதைக் கவனித்தான். அவளுக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்த யோங் போ, தொடர்ந்து அவளுக்கு உற்சாகமூட்டி அவளுக்கு உற்றத் தோழனாகத் திகழ்ந்தான். தனது சொந்த வாழ்க்கைப் பாடங்களை சின் யூவுடன் பகிர்ந்துகொண்ட அவன், அவளுக்குத் தன்னம்பிக்கை கொடுத்து வந்தான். நாளடைவில் சின் யூ தனது பாடங்கள் அனைத்திலும் நல்ல முன்னேற்றம் காட்டத் தொடங்கினாள்.



சின் யூவின் திறமை மீது அவன் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. அவள் தனது பள்ளிப்பாடங்களிலும் தேர்வுகளிலும் திறன்பட செய்ய ஆரம்பித்தாள். அதைக் கண்ட யோங் போ பூரித்துப் போனான். சின் யூ, யோங் போ தன்மீது கொண்டிருந்த அக்கறையையும் அன்பையும் பெரிதும் மதித்தாள். அவனுடைய தொடர் ஊக்கத்தினால் அவள் நேர்மறை எண்ணங்கள் கொண்டவளாக மாறினாள். இவர்களுக்கிடையே உள்ள இந்தப் பிணைப்பு அவர்களின் நட்பை இன்னும் ஆழமாக்கியது.



இமானுவல் (4RY)

# 2 நன்றியுணர்வுடன்



தொடக்கநிலை இரண்டில் படிக்கும்போது, தவனேஷ் ரெளவுக்கு (4 Resilience) காலில் ஏற்பட்ட காயத்தினால் அவன் அறுவை சிகிச்சை ஒன்றிற்குச் செல்ல நேரிட்டது. அதன் விளைவாக, அவனுக்கு நடப்பதில் சிரமம் ஏற்பட்டது. நல்ல வேளையாக அவன் வகுப்பு சட்டாம் பிள்ளையான, ஆராதியா சிங் (4 Resilience) அவனுக்கு உதவும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள்.

தவனேஷ் பள்ளியில் செல்ல வேண்டிய எல்லா இடங்களுக்கும், ஆராதியா அவனுடைய சக்கர நாற்காலியில் அவனை அழைத்துச் சென்றாள். அதுமட்டுமின்றி, அவன் மருத்துவரைக் காணப் போகும்போதெல்லாம் அவள் பள்ளியில் நடந்த பாடங்களை அவனுக்காக குறிப்புகள் எடுத்துத் தந்தாள். இது தவனேஷ் பள்ளிப்பாடங்களைத் தடையின்றிப் படிக்க பெரும்துணையாக இருந்தது. மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது ஆராதியாவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தந்தது. தவனேஷ் எந்நேரத்திலும் தனிமையை உணர்ந்திடக்கூடாது என்பதற்காக அவள் பள்ளியில் நடக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் தவனேஷ் பங்கேற்க ஆராதியா ஊக்கம் தந்தாள்.



அஷ்வத் (4RY)

# நான் என்றும் நன்றியுடன் இருப்பேன்

## என் குடும்பத்திற்கு

என்னை அன்பாகக் கவனித்துக்கொள்வதற்கும் எனக்குத் தேவையான அனைத்தையும் எனக்கு வாங்கித் தருவதற்கும் மிக்க நன்றி!

## என் நண்பர்களுக்கு

நான் கவலையாக இருக்கும்போது என்னை மகிழ்விப்பதற்கும் எனக்கு உதவி தேவைப்படும்போது எனக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கும் மிகவும் நன்றி!

## என் நாட்டிற்கு

என்னைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் சிறந்த கல்வி வாய்ப்புகளை எனக்கு ஏற்படுத்தித் தருவதற்கும் நன்றி!



இமானுவல் (4RY)



அஷ்வத் (4RY)